# மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம் ( சார்பு நீதிமன்றம்), பொள்ளாச்சி

**முன்னிலை திரு. M. மணிகண்டன், M.A., M.L., PG.D, C.F.Sc,**
**சார்பு நீதிபதி, பொள்ளாச்சி**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ம் நாள் செவ்வாய்கிழமை
(2056 திருவள்ளுவர் ஆண்டு, விசுவாவசு வருடம், பங்குனி மாதம் 03 ம் நாள்)

**மோ.வா.வி.கோ.மனு எண். 39/2019**
CNR No. TNCB-11000267-2019

G.மணிவாசகம், த/பெ. குருசாமி, இந்து, வயது 25, வசிப்பிட முகவரி கதவு எண்.2/113, காளியம்மன் கோவில் தெரு, கோலார்பட்டி, பொள்ளாச்சி தாலூக்கா.

...மனுதாரர்

**/எதிர்/**

1. G.சின்ன ராஜா, த/பெ. கணேசன், இந்து, வயது 33, வசிப்பிட முகவரி கதவு எண்.3/73, சடையகவுண்டன்புதூர், அந்தியூர், உடுமலைபேட்டை தாலூக்கா.

2. தி ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், அலுவலக முகவரி R.V.K.பில்டிங், முதல் தளம், 54, தளி ரோடு, உடுமலைபேட்டை – 642 126.

...எதிர்மனுதாரர்கள்

இம்மனுவானது கடந்த 10.03.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரருக்காக அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.V.R.சந்திரசேகர், பி.எஸ்சி., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், 2 ம் எதிர்மனுதாரருக்காக அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.N.சுந்தரராஜ், பி.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் என்னால் கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் எனது சீரிய ஆய்விற்கு உட்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பகரும்,

## உத்தரவு

இந்த மனுவானது எதிர்மனுதாரர்கள், மனுதாரருக்கு இழப்பீடாக ரூ.10,00,000/– தொகையை மனுத்தாக்கல் செய்த 25.02.2019 ம் தேதி முதல் பின்வட்டியுடன் இழப்பீடாக செலுத்த உத்தரவு பிறப்பிக்கக் கோரியும், இம்மனு செலவு தொகை மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சாராம்சம் :**

2.1) மனுதாரர் கடந்த 02.03.2018 ம் தேதியன்று காலை 10.15 மணியளவில் அவரது குடும்பத்தினர் மற்றும் நண்பரான செந்தில் (எ) சிவப்பிரகாசம் என்பவருடன் பழனி கோவிலுக்கு செல்வதற்காக நடைப்பயணமாக புறப்பட்டு, கோலார்பட்டியிலிருந்து பழனிக்கு செல்ல வேண்டி உடுமலை – பொள்ளாச்சி ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி இடதுபுற ஓரமாக அந்தியூர் ஸ்ரீமஹால் திருமண மண்டபத்திற்கு அருகில் நடைபயணம் சென்று கொண்டிருந்தபோது அதே திசையில் மேற்கிலிருந்து கிழக்காக வந்த TN 42 X 4860 என்ற பதிவெண் கொண்ட Hero Honda Splendor Plus வாகனத்தை 1ம் எதிர்மனுதாரர் அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும் ஓட்டி வந்து நடைபயணமாக வந்த மனுதாரரின் மீது மோதியதில் மனுதாரர் நிலைதடுமாறி கீழே விட்டார் என்றும், அதனால் மனுதாரருக்கு வலது முழங்காலுக்கு கீழும் மற்றும் உடல் முழுவதும் காயங்கள் ஏற்பட்டு கோலார்பட்டி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல்சிகிச்சைக்காக உடுமலை பிரணவ்ஸ் ஆர்த்தோ கேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றும் கூறப்பட்டுள்ளது.

2.2) விபத்தினால் மனுதாரருக்கு வேலை செய்யும் திறன் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், விபத்து சமயத்தில் மனுதாரருக்கு 25 வயது என்றும், விபத்து சமயம் மனுதாரர் SCP டிரான்ஸ்போர்ட் பயணிகள் பேருந்தில் கன்டக்டராக பணிபுரிந்து மாதம் ரூ.15,000/– சம்பாதித்து வந்தார் என்றும், மேற்படி

விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை சாலை விதிகளை கடைபிடிக்காமல் ஓட்டி வந்ததே காரணம் என்றும், 1ம் எதிர்மனுதாரர் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டிய ஓட்டுனர் என்றும், 2ம் எதிர்மனுதாரர், விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் காப்பீட்டாளர் என்றும், மனுதாரருக்கு ஏற்பட்ட காயம், மன உளைச்சல், வலி மற்றும் வருமான இழப்பு ஆகியவற்றிற்கு நஷ்ட ஈடாக ரூ.10,00,000/- கோரப்பட்டுள்ளதாக இம்மனுவில் கூறப்பட்டுள்ளது.

**3**. 1ம் எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் முன்னிலையாகாததால் தோன்றாதரப்பினராக வைக்கப்பட்டு அவ்வாறே இருந்து வருகின்றார்.

4. **<u>2ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சாராம்சம்:</u>**

மனுவானது பொய்யானது என்றும், சட்டப்படி ஒத்துக்கொண்ட பொருண்மைகளை தவிர இதர பொருண்மைகளை மனுதாரர் தான் மெய்பிக்க வேண்டும் என்றும், விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் சாலைகளை விதிகளை பின்பற்றி மெதுவாக வாகனத்தை இயக்கினார் என்றும், அப்போது மனுதாரர் சாலையின் மையத்தில் நடைபயணம் செய்தார் என்றும், அதனால் 1ம் எதிர்மனுதாரரால் வாகனத்தை கட்டுப்படுத்த இயலவில்லை என்றும், மனுதாரரே மேற்படி விபத்திற்கு காரணம் என்றும், எனவே 2ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டு தொகையை செலுத்த கடமைப்பட்டவரல்ல என்றும், 1ம் எதிர்மனுதாரர் சாலை விதிகளை பின்பற்றி தான் வாகனத்தை இயக்கினார் என்றும், மனுதாரரின் கவனக்குறைவு தான் சாலை விபத்திற்கு காரணமாக அமைந்தது என்றும், மனுதாரர் கோரியுள்ள இழப்பீடானது மிகவும் அதிகமாக உள்ளது என்றும், ஆதலால் 2ம் எதிர்மனுதாரரைப் பொருத்து மேற்படி மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமாய் கூறப்பட்டுள்ளது.

5. **<u>இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில்,</u>**

1. விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் அஜாக்கிரதையாலும், அதிவேகத்தாலும் மற்றும் கவனக்குறைவாலும் ஏற்பட்டதா ?

2. மனுதாரருக்கு எதிர்மனுதாரர்கள் இழப்பீடு வழங்கக் கடமைப்பட்டவர்களா? ஆம் என்றால் எவ்வளவு ?

3. மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்ன ?

**6.** இம்மனுவில் மனுதாரர் தரப்பில் ம.சா.1 மற்றும் ம.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.13 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித சாட்சிகளும் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. நீதிமன்ற சான்றாவணமாக நீ.ம.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**7. <u>பிரச்சினை 1–க்கான தீர்வு :–</u>**

7.1) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் ம.சா.1ன் சாட்சியத்தை கவனமாக பரிசீலனை செய்யும் போது மனுதாரர் கடந்த 02.03.2018ம் தேதியன்று காலை 10.15 மணியளவில் அவரது குடும்பத்தினர் மற்றும் நண்பரான செந்தில் (எ) சிவப்பிரகாசம் என்பவருடன் பழனி கோவிலுக்கு செல்வதற்காக நடைப்பயணமாக புறப்பட்டு, கோலார்பட்டியிலிருந்து பழனிக்கு செல்ல வேண்டி உடுமலை – பொள்ளாச்சி ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி இடதுபுற ஓரமாக அந்தியூர் ஸ்ரீமஹால் திருமண மண்டபத்திற்கு அருகில் நடைபயணம் சென்று கொண்டிருந்தபோது அதே திசையில் மேற்கிலிருந்து கிழக்காக வந்த TN 42 X 4860 என்ற பதிவெண் கொண்ட Hero Honda Splendor Plus வாகனத்தை 1ம் எதிர்மனுதாரர் அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும் ஓட்டி வந்து நடைபயணமாக வந்த மனுதாரரின் மீது மோதியதில் மனுதாரர் நிலைதடுமாறி கீழே விட்டார் என்றும், அதனால் மனுதாரருக்கு வலது முழங்காலுக்கு கீழும் மற்றும் உடல் முழுவதும் காயங்கள் ஏற்பட்டு கோலார்பட்டி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல்சிகிச்சைக்காக உடுமலை பிரணவ்ஸ் ஆர்த்தோ கேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

7.2) மேலும் இந்த வழக்கில் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட காவல் துறை சம்பந்தப்பட்ட ஆவணங்களையும், சான்றாவணங்களையும் இந்த நீதிமன்றம் பரிசீலனை செய்யும்போது 1ம் எதிர்மனுதாரரின் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, பின்னிட்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. மேலும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ம.சா.ஆ.3 மாதிரி வரைபடம், பார்வை மகஜர் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையையும், மேலும் ம.சா.1ன் சாட்சியத்தையும் ஒருசேர பரிசீலனை செய்யும்போது 1ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்து மனுதாரரின் மீது மோதி விபத்தினை ஏற்படுத்திவிட்டார் என்பது தெரியவருகிறது. ஆகவே 1ம் எதிர்மனுதாரரின் அதிவேகமும், அஜாக்கிரதையும் தான் விபத்திற்கு காரணம் என்று இந்த நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

**8. <u>பிரச்சனை 2 மற்றும் 3–க்கான தீர்வு :–</u>**

8.1) இந்த வழக்கில் மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய இழப்பீட்டு தொகை எவ்வளவு என்று இந்த நீதிமன்றம் கவனமாக பரிசீலனை செய்யும் போது, மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை பரிசீலனை செய்யும்போது மனுதாரருக்கு 25 வயதாகிறது என்றும், SCP டிரான்ஸ்போர்ட் பயணிகள் பேருந்தில் கன்டக்டராக பணிபுரிந்து வருகிறார் என்றும், மாதம் ரூ.15,000/– சம்பாதித்து வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அதனைப் பொறுத்து எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. ஆகவே மனுதாரரின் வயது மற்றும் வேலையை கருத்திற்கொள்ளும்போது இந்நீதிமன்றம் Notional Income தான் எடுத்துக்கொள்ளவேண்டியுள்ளது. அந்த வகையில் மனுதாரர் மாதத்திற்கு ரூ.10,000/– சம்பாதித்திருக்க வாய்ப்புள்ளது என்று இந்த நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

8.2) மேலும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது இந்த வழக்கில் மனுதாரருக்கு ஏற்பட்ட மருத்துவ செலவாக ரூ.1,15,512/–க்கான மருத்துவ பில்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனைப் பொறுத்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்காத நிலையில் மருத்துவ பில்களுக்கான தொகை ரூ.1,15,512/– மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்று இந்த நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது. மேலும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ம.சா.ஆ.6 காயச்சான்றிதழை இந்த நீதிமன்றம் பரிசீலனை செய்யும்போது மனுதாரருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்பது தெரியவருகிறது. மனுதாரருக்கு கொடுங்காயம் ஏற்பட்டுள்ள நிலையில் அவருடைய வயது, வேலை ஆகியவற்றை கருத்திற்கொள்ளும்போது குறைந்தது நான்கு மாதத்திற்கு மனுதாரரால் எந்த வேலைக்கு சென்றிருக்க வாய்ப்பில்லை என்றும், அதனால் வருமான இழப்பு ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது என்றும் ஒரு மாதத்திற்கு வருமான இழப்பாக ரூ.10,000/– வீதம் நான்கு மாதத்திற்கு வருமான இழப்பாக ரூ.40,000/– கிடைக்கத்தக்கது என்றும் இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

8.3) மேலும் மனுதாரருக்கு கொடுங்காயம் ஏற்பட்டுள்ள நிலையில் குறைந்தது இரண்டு மாதங்களுக்கு உதவியாளரின் உதவி தேவைப்பட்டிருக்கும் என்ற நிலையில் ஒருநாள் உதவியாளரின் செலவு ரூ.200/– என்று எடுத்துக்கொண்டால் கூட ஒரு மாதத்திற்கு ரூ.6,000/– வரும் என்ற நிலையில் உதவியாளரின் செலவுத்தொகையாக மாதத்திற்கு ரூ.5,000/– எடுத்துகொண்டு இரண்டு மாதங்களுக்கு ரூ.10,000/– கிடைக்கத்தக்கது என்று இந்த நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது. மனுதாரருக்கு கொடுங்காயங்கள் ஏற்பட்டுள்ள நிலையில் மனுதாரருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைகளுக்காக ரூ.25,000/– வழங்குவது தான் உகந்ததாக இருக்கும் என்றும், மேலும் மனுதாரருக்கு ஏற்பட்ட கொடுங்காயத்தின் காரணமாக மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றிருக்க வாய்ப்புள்ளது என்ற நிலையில் ஊட்டச்சத்து உணவிற்காக

ரூ.10,000/- கிடைக்கத்தக்கது என்றும் இந்த நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது. மேலும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நீ.ம.சா.ஆ.1 ஊனச்சான்றிதழை பரிசீலனை செய்யும்போது மனுதாரருக்கு 24% ஊனம் ஏற்பட்டுள்ளது என்று ஊனச்சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. மேலும் விபத்தானது 2018ம் வருடம் நடைபெற்ற நிலையில் மேலும் மனுதாரரின் வயது மற்றும் விபத்து நடந்த தேதியை கருத்திற்கொள்ளும்போது 1% க்கு ரூ.6,000/- எடுத்துக்கொள்ளலாம் என்று மாண்புமிகு உயர்நீதிமன்ற, மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் 1% க்கு ரூ.6,000/- என எடுத்துக்கொண்டு 24% க்கு ரூ.1,44,000/- கிடைக்கத்தக்கது என்று இந்த நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது. ஆகவே மனுதாரருக்கு ஏற்பட்ட இழப்பீட்டை கணக்கிடும்போது

**Calculation Sheet**

| Sl.No. | Under the Head | Calculation |
|---|---|---|
| 1 | For Loss of Earning Capacity<br>1 Month – Rs.10,000/-<br>4 Month – Rs.40,000/- | Rs.40,000/- |
| 2. | For Pain and Sufferings | Rs.25,000/- |
| 3. | For Extra Nourishment | Rs.10,000/- |
| 4. | For Medical Bills | Rs.1,15,512/- |
| 5. | For Attender Charges | Rs.10,000/- |
| 6. | For Disability<br>1% - Rs.6,000/-<br>24% - Rs.1,44,000/- | Rs.1,44,000/- |
| | **Total** | **Rs.3,44,512/-** |

எனவே இந்த மனுவில் மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய இழப்பீட்டு தொகை **ரூ.3,44,512/- Rounded off to ரூ.3,44,500/-** அவ்வாறே பிரச்சனை எண்.3 ஐ தீர்மானிக்கிறேன்.

"மேற்கண்ட வழக்கில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் M/s.Cholamandalam MS General Insurance Company Limited., Vs. Ayyanar & others. (2020 (4) CTC 272) என்ற வழக்கில் வழங்கிய உத்தரவின் படி இறுதி உத்தரவு தயார் செய்யப்படாது."

"மேலும் MV Act Section 168(2) மற்றும் விதி 20 (6)ன் படி தரப்பினர்கள் உத்தரவின் நகலை இலவசமாகப் பெறத்தக்கவர்கள்."

ஆகவே, **முடிவாக,** இம்மனு பகுதியாக செலவு தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கு, எதிர்மனுதாரர்கள் இழப்பீட்டு தொகை **ரூ.3,44,500/-**ஐ மனுதாக்கல் செய்த தேதியிலிருந்து தொகை வசூலாகும் தேதிவரை ஆண்டு ஒன்றுக்கு 7.5% வட்டியுடன் (தள்ளுபடி காலம் நீங்கலாக) இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் Motor Accident Claims Tribunal/Subordinate Judge, State Bank of India. Pollachi Branch Account Number SJPOY1 IFSC Code SBIN0004266 என்ற வங்கி கணக்கில் நேரடியாக வங்கி மாற்றம் மூலம் செலுத்தவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. மேற்படி தொகை மற்றும் மனுதாரரின் செலவுதொகை மற்றும் மொத்தத் தொகைக்கான வட்டி ஆகியவைகள் செலுத்தப்பட்டவுடன் இத்தீர்ப்பாயத்தை அணுகி உரியவங்கி அறிவுறுத்தலைப் பெற்று, மேற்படி மனுதாரருக்கான இழப்பீட்டு தொகையையும் மற்றும் அதற்குண்டான வட்டியையும் பெற்றுக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. பற்றாக்குறை நீதிமன்றக் கட்டணம் இருப்பின் 1 மாதத்திற்குள் நீதிமன்றத்தில் செலுத்த உத்தரவிடப்படுகிறது. அவ்வாறு செலுத்தத் தவறும் பட்சத்தில் செலுத்தத் தவறிய காலத்திற்கு உரிய வட்டியை இழப்பதோடு, செலுத்தும் வரை இவ்வுத்தரவு நிறைவேற்றுதற்குரியது அல்ல என்றும் உத்தரவிடப்படுகிறது. **வழக்கறிஞர் கட்டணம் ரூ.15,890/- எனவும், நீதிமன்ற கட்டணம் ரூ.2,817.50 எனவும் நிர்ணயம் செய்யப்படுகிறது.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு அவரால் குறிப்பு எடுக்கப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 17 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

M MANIKANDAN
Digitally signed by M MANIKANDAN
Date: 2026.03.17 17:29:30 +0530

மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம்/
சார்பு நீதிபதி,
பொள்ளாச்சி

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்:</u>**

| | |
|---|---|
| ம.சா.1 | மணிவாசகம் |

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| குறியீடு | தேதி | ஆவணம் மற்றும் அதன் தன்மை |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 07.03.2018 | முதல் தகவல் அறிக்கை சான்று நகல் |
| ம.சா.ஆ.2 | – | மாதிரி வரைபடம் சான்று நகல் |
| ம.சா.ஆ.3 | 07.03.2018 | பார்வை மகஜர் சான்று நகல் |
| ம.சா.ஆ.4 | 08.03.2018 | TN 42 X 4860 பதிவெண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன அறிக்கை சான்று நகல் |
| ம.சா.ஆ.5 | 07.03.2018 | இறுதி அறிக்கை சான்று நகல் |
| ம.சா.ஆ.6 | 31.05.2018 | காயச்சான்றிதழ் சான்று நகல் |
| ம.சா.ஆ.7 | – | ரூ.1,15,512/–க்கான மருத்துவ பில்கள் அசல் 31 எண்ணிக்கை |
| ம.சா.ஆ.8 | 08.03.2018 | மருத்துவ விடுவிப்பு அறிக்கை அசல். |
| ம.சா.ஆ.9 | – | 1 ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் நகல் |
| ம.சா.ஆ.10 | – | TN 42 X 4860 பதிவெண் கொண்ட வாகனத்தின் இன்சூரன்ஸ் பாலிசி நகல் |
| ம.சா.ஆ.11 | – | மனுதாரரின் கண்டக்டர் உரிமத்தின் புகைப்பட நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) |
| ம.சா.ஆ.12 | – | மனுதாரரின் ஆதார் அடையாள அட்டையின் |

| | | |
|---|---|---|
| | | நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) |
| ம.சா.ஆ.13 | – | மனுதாரரின் நிரந்தர கணக்கு அட்டையின் நகல் |

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :</u>** இல்லை

M MANIKANDAN

Digitally signed by M MANIKANDAN
Date: 2026.03.17 17:29:37 +0530

மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம்/
சார்பு நீதிபதி,
பொள்ளாச்சி.

**<u>FAIR ORDER/ DRAFT ORDER</u>**
MCOP No.39/2019
17.03.2026
Sub Court, Pollachi